# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

### இந்தியாவில் இலங்கையைச் சேர்ந்த 40 சிவில் சேவை அதிகாரிகளுக்கு ஆளுமை விருத்தி செயல்திட்டம்

இந்தியாவில் உள்ள நல்லாட்சிக்கான தேசிய நிலையத்தில் 2026 ஆகஸ்ட் 21 ஆம் திகதி வரை நடைபெற்ற அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான பரந்தளவான ஆளுமை விருத்தி செயற்திட்டம் ஒன்றில் இலங்கை சிவில் சேவை பிரிவை சேர்ந்த 40 அதிகாரிகள் பங்கேற்றுள்ளனர்.

2. அனர்த்த முகாமைத்துவம் குறித்த தொனிப் பொருளின் கீழ் நடைபெற்று முடிந்த இந்த ஐந்தாவது விசேட பயிற்சியானது, தயார் நிலை, பதில் நடவடிக்கைகள், மீட்பு செயற்பாடுகள் மற்றும் மீள்தன்மையை கட்டி எழுப்புதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் சிவில் சேவை அதிகாரிகளின் ஆளுமைகளை வலுவாக்குவதனை இலக்காகக் கொண்டதாகும்.

3. அனர்த்த தயார் நிலை மற்றும் தணிப்பு தந்திரோபாயங்கள், அனர்த்த முகாமைத்துவ திட்டமிடல் மற்றும் கொள்கைகள், பதிலளிக்கும் பொறிமுறைகள் மற்றும் களநடவடிக்கைகள், முன்கூட்டிய எச்சரிக்கை பொறிமுறைகள், நகர மற்றும் உள்ளூர் மீள்தன்மை, அனர்த்த முகாமைத்துவத்துக்கான அரச நிறுவனங்களை கட்டி எழுப்புதல், அனர்த்த நெருக்கடி தவிர்ப்புக்கான செண்டாய் கட்டமைப்பினை அமுல்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளை உள்ளடக்கியதாக இந்த நிகழ்ச்சி திட்டம் அமைந்திருந்தது.

4. அத்துடன் தேசிய அனர்த்த முகாமைத்துவ அதிகார சபை, தேசிய அனர்த்த பதிலளிப்பு படை, உத்தரகாண்ட் மாநில அனர்த்த முகாமைத்துவ அதிகார சபை, மற்றும் உத்தரகாண்ட் மாநில அனர்த்த பதிலளிப்பு படை உள்ளிட்ட நிறுவனங்களுக்கும் இப்பயிற்சியில் கலந்து கொண்டிருந்தோர் கள விஜயங்களை மேற்கொண்டிருந்தனர்.

5. 2024 ஜனாதிபதி அதிமேதகு அனுரகுமார திசாநாயக்க அவர்கள் இந்தியாவுக்கு மேற்கொண்டிருந்த உத்தியோகபூர்வ விஜயத்தின் போது நல்லிணக்கத்துக்கான தேசிய நிலையம் மற்றும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் ஆகியவற்றுக்கிடையில் ஐந்து வருட காலப்பகுதிக்குள் இலங்கை சிவில் சேவையின் 1500 அதிகாரிகளுக்கு பயிற்சிகளை வழங்குவதற்காக கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் அங்கமாக இச்செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

6. இலங்கையுடன் இந்தியா மேற்கொண்டிருக்கும் அபிவிருத்தி ஒத்துழைப்பு திட்டங்களின் முக்கிய பகுதியாக ஆளுமை விருத்தி செயல் திட்டம் காணப்படுகின்றது. இந்த உறுதிப்பாட்டிற்கு வலுச் சேர்க்கும் வகையில் 2025 ஏப்ரலில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் இலங்கை அதிகாரிகளுக்காக வருடாந்தம் 700 தனிப்

பயனாக்கப்பட்ட பயிற்சி ஆசனங்களை ஒதுக்குவதாக அறிவித்திருந்தார். இது இந்தியாவின் ஆளுமை விருத்தி செயல்திட்ட இலக்குகளை மேம்படுத்தும் அதேநேரம், தற்போது வருடாந்தம் ஆயிரம் இலங்கை அதிகாரிகள் இதன் மூலமாக பயனடைந்து வருகின்றனர்

************

**கொழும்பு**
**21 ஆகஸ்ட் 2026**